இந்திய சுவிஷேச லுத்தரன் சபை

# நாகர்கோவில் சபைச்சங்கம்

## செயற்குழு கூட்டம்

எண்: 1/22

| | | |
|---|---|---|
| இடம் | : | சபைச்சங்க அலுவலகம், நாகர்கோவில் |
| நாள் | : | 12–11–2022, சனிக்கிழமை |
| நேரம் | : | காலை 10.00 மணி |
| வருகை | : | 19 |

சபைச்சங்க அலுவலர்கள்:

| | | |
|---|---|---|
| அருள்திரு. K.S. டேவிட்சன் | – | தலைவர் |
| அருள்திரு. R. கனகசுந்தரம் | – | உபதலைவர் |
| திரு. P. சாம் சுதாகர் | – | செயலாளர் |
| திரு. R. பினோபா | – | பொருளாளர் |

சபைச்சங்க செயற்குழு உறுப்பினர்கள்:

குளச்சல் வட்டம்

அருள்திரு. S. டேவிட் ஜெயக்குமார்
திரு. சஜீஷ் S. தாஸ்
Dr. C. ஜீவராஜ்

நாகர்கோவில் வட்டம்

அருள்திரு. T. டேவிட் தம்பிராஜ்
திரு. C. ஜெயச்சந்திரன்
திரு. A. பால்சன்

தோவாளை வட்டம்

அருள்திரு. J. ஜாண் தாஸ்
திரு. Y. தமிழ் செல்வன்
திரு. T. கிருபாகரன்

திருநெல்வேலி வட்டம்

அருள்திரு. D. ராஜா
திரு. S. சைமன் பிரான்சிஸ்
திரு. G. ராஜன்

மதுரை வட்டம்

அருள்திரு. N. வெஸ்லி மணிக்குமார்
திரு. G. சிம்சன்
திரு. C. மெயின்சன்

சிறப்பு அழைப்பாளர்கள்:

| | | |
|---|---|---|
| திரு. M. சாம் லாங்லின் | – | சபைமன்ற உறுப்பினர், நாகர்கோவில் வட்டம் |
| திரு. J. ஜோஸ் ஞானசேகர் | – | சபைமன்ற உறுப்பினர், தோவாளை வட்டம் |

ஆரம்ப ஜெபம் : அருள்திரு. K.S. டேவிட்சன், சபைச்சங்க தலைவர்

**நிகழ்ச்சி நிரல் வாசித்து ஏற்றுக் கொள்ளப்பட்டது**

வரவேற்புரை : சபைச்சங்க செயலாளர், திரு. P. சாம் சுதாகர், தலைவர், உபதலைவர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார்.

**மௌன அஞ்சலி**

நமது சபைச்சங்கத்தில் போதகர்களாக பணிபுரிந்து பிறகு சென்னை வான்மலர் நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அருள்திரு அறிவர் J. வின்செண்ட், அருள்திரு. அறிவர் M. செல்வகுணாளன், நமது சபைச்சங்கத்தில் போதகராகவும் கன்கார்டியா இறையியற் கல்லூரியின் துணை முதல்வராக பணியாற்றி ஓய்வு பெற்ற அருள்திரு. அறிவர் C. தங்கப்பன், திருநெல்வேலி வட்டம் ரெத்தினபுரம் போதகவட்டத்தில் போதகராக பணியாற்றிக் கொண்டிருந்த அருள்திரு. K. ஜாண்ராபி, நமது சபைச்சங்கத்தின் முன்னாள் பொருளாளரும், இ.சு.லு.ச. சபைமன்ற உறுப்பினரும், நாகர்கோவில், கன்கார்டியா உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியருமான திரு. S. ஜோசப், அதே பள்ளியில் பட்டதாரி ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி. பியூலா நார்பட், இடைநிலை ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி. ஞானாம்பாள் லாசர், உடற்பயிற்சி ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்த திரு. S. மானக்ஷா, நமது சபைச்சங்கத்தின் நாகர்கோவில் வட்ட சபைச்சங்க செயற்குழு உறுப்பினரும், சபைச்சங்க செயலாளரும், வடக்கன்குளம் கன்கார்டியா மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியருமான திரு. S. கனகையா, அதே பள்ளியில் சபைச்சங்க செயலாளரும், தலைமையாசிரியருமான திரு. P. ராஜையா, பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. உடையார், இடைநிலை ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. C. ஜாண், முதுகலை பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. ஜேசையா, வள்ளியூர், கன்கார்டியா மேல்நிலைப்பள்ளியின் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. V. மரிய சிங்கராஜ், நமது சபைச்சங்கத்தின் முன்னாள் பொருளாளரும், பூட்டேற்றி, கன்கார்டியா மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியருமான திரு. C. தபசிமணி, அதே பள்ளியில் நமது சபைச்சங்கத்தின் முன்னாள் செயலாளரும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியருமான திரு. S. சுடர்மணி, குளச்சல் வட்ட சபைச்சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினரும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியருமான திரு. D. ஜெயதாஸ், பூட்டேற்றி, கன்கார்டியா மேல்நிலைப்பள்ளியின் முதுகலைப் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. N. கல்யாண சுந்தரம், தோவாளை வட்ட சபைச்சங்க செயற்குழு உறுப்பினரும், நடூர் லுத்தரன் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியருமான திரு. E. தங்கராஜ், அதே பள்ளியில் நாகர்கோவில் வட்ட சபைச்சங்க செயற்குழு உறுப்பினரும், இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. P. பரமதாஸ், இடைநிலை ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி. பாக்கியம் ஜாண், திருநெல்வேலி வட்ட சபைச்சங்க செயற்குழு உறுப்பினரும், ஆரல்வாய்மொழி லுத்தரன் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியருமான திரு. S. கோபாலன், தனக்கர்குளம், எம்.இ.எல்.ஐ.எம். தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. தங்கசாமி, வடசேரி லுத்தரன் தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. S. சமாதானம், குளச்சல் வட்ட சபைச்சங்க செயற்குழு உறுப்பினரும், பரவை இணையம் லுத்தரன் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. A. சாலமன், காட்டுக்கடை, லுத்தரன் தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. C. குருபாதம், சரல்விளை லுத்தரன் நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. S. ஜார்ஜ் சாலமன், தோவாளை வட்ட சபைச்சங்க செயற்குழு உறுப்பினரும், கணேசபுரம் லுத்தரன் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியருமான திரு. K. மாசில்லாமணி, தோவாளை வட்ட செயலாளரும், சபைச்சங்க

செயற்குழு உறுப்பினருமான திரு. D. கருத்துடையான், இ.சு.லு.ச. தேர்தல் ஆணையராக பதவி வகித்த திரு. M. தங்கராஜ், நமது சபைச்சங்க அலுவலகத்திலுள்ள பள்ளி மேலாளர் / தாளாளர் அலுவலகத்தில் எழுத்தராக பணிபுரிந்த திரு. S.G. பாக்கியதாஸ், நமது புத்தக நியையம் மற்றும் திருநெல்வேலி வட்டம், குண்டல் போதக வட்டத்தில் உபதேசியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. S. பிரடெரிக் பால்மர், மதுரை வட்ட சபைச்சங்க செயற்குழு உறுப்பினரும், இ.சு.லு.ச. சபை மன்ற உறுப்பினரான அறிவர் M. இஸ்ரவேல், பூட்டேற்றி, கன்கார்டியா மேல்நிலைப்பள்ளி இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு. A. கிறிஸ்துதாஸ், வடசேரி லுத்தரன் தொடக்கப்பள்ளி ஆசிரியையாகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருமதி. C. பாலின் சாமுவேல் ஆகியோர் மறைவுக்கு செயற்குழுவில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## <u>EC/1/22</u> <u>வங்கி கணக்கு செயல்படுதல்</u>

நமது சபைச்சங்க வங்கி (வங்கி கணக்கு எண்: 2404101001439) கணக்கு கடந்த நான்கு வருடங்களாக செயல்படாத நிலையில் செயலிழந்துவிட்டது. அதனை புதுப்பிக்கவும், பின்னர் நடைபெற்ற சபைச்சங்க தேர்தலில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சபைச்சங்க தலைவர் அருள்திரு. K.S. டேவிட்சன், பொருளாளர் திரு. R. பினோபா ஆகிய இருவரும் கூட்டு கையொப்பமிட்டு வங்கிக் கணக்கை சரிசெய்து செயல்பட செயற்குழு தீர்மானிக்கிறது.

## <u>EC/2/22</u> <u>சபைச்சங்க அலுவலக வரவு செலவு</u>

நமது சபைச்சங்கத்திற்குரிய 2022 –ம் ஆண்டு நவம்பர் 1 –ம் தேதி முதல் 2023 –ம் ஆண்டு மார்ச் முடிய உள்ள நிர்வாகச் செலவுகளை தயாரித்து (சபைச்சங்க அலுவலக பிரயாணப்படி, மின்சாரம், தண்ணீர் கட்டணம், வட்ட நிர்வாகச் செலவு, அச்சடித்தல், புகைப்பட நகல், சிறப்பு ஊழியங்களான மாதர் சங்கம், வாலிபர் சங்கம், விடுமுறை வேதாகமப்பள்ளி, ஓய்வுநாட்பள்ளி, நீதிமன்ற வழக்குகள், போதகர்கள், பயிற்சி போதகர்கள், பெண் ஊழியர்கள் கூட்டம், போதகர் சங்க கூட்டம் போன்ற செலவினங்கள்) சபைச்சங்க பொறுப்பாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சேர்ந்து தயாரித்து இ.சு.லு.ச. பொதுப் பொருளாளர் / செயலாளரிடம் சமர்ப்பிக்க செயற்குழு தீர்மானிக்கிறது.

## <u>EC/3/22</u> <u>அலுவலக பணியாளர் நியமனம்</u>

தற்போது சபைச்சங்க அலுவலகத்தில் பணியாளர்கள் இல்லாத நிலையில் சபைச்சங்க நிர்வாகம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தில், ஏற்கெனவே சபைச்சங்க அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற எழுத்தர் திரு. A. அமலன் அவர்களை நமது இ.சு.லு.ச. அமைப்புச்சட்டப்படி புதிய பணியாளர்களை நியமனம் செய்வதற்குரிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி நியமனம் செய்யும் வரை அவரை தற்காலிக பணிகளை செய்ய செயற்குழு தீர்மானிக்கிறது.

## <u>EC/4/22</u> <u>தாளாளர் நியமனம்</u>

திருமதி. S. சாந்தி, தலைமை ஆசிரியர், எம்.இ.எல்.ஐ.எம். தொடக்கப்பபள்ளி, அம்பலவாணபுரம், திருமதி. ஆ. ஜாய்ஸ்மேரி, தலைமை ஆசிரியர், எம்.இ.எல்.ஐ.எம். தொடக்கப்பபள்ளி, வள்ளியூர், திருமதி. ந. ஜீவனா சாந்தி, தலைமை ஆசிரியர், எம்.இ.எல்.ஐ.எம். தொடக்கப்பபள்ளி, பெருங்குடி ஆகியோரின் தாளாளர் வேண்டி விண்ணப்பித்த கடிதங்களின் அடிப்படையிலும் திருநெல்வேலி செயற்குழு உறுப்பினர்கள் அருள்திரு. D. ராஜா, திரு. S. சைமன் பிரான்சிஸ், திரு. G. ராஜன்

ஆகியோரின் வேண்டுதல்களின் அடிப்படையிலும் அவசரமாக நமது சபைச்சங்க நிர்வாகத்திற்குட்பட்ட திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளம், வள்ளியூர் மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் அம்பலவாணபுரம், வடக்கன்குளம், பெருங்குடி, வேப்பிலான்குளம், தனக்கர்குளம், கால்கரை, அம்மச்சிகோவில், வள்ளியூர் (வள்ளியூர் சரகம்) சமாதானபுரம், தெற்கு விஜய நாராயணம் (நாங்குநேரி சரகம்) எம்.இ.எல்.ஐ.எம். தொடக்கப்பபள்ளிகளின் தாளாளராக திரு. J. ராஜசேகரன், M.A., B.Ed., M.Phil., Ph.D. அவர்களை 15–11–2022 முதல் நியமனம் செய்ய செயற்குழு தீர்மானிக்கிறது. மதுரை மாவட்டம் கள்ளிக்குடி சரகம், க. வெள்ளாகுளம், தேனி மாவட்டம் பெரியகுளம சரகம், லெட்சுமிபுரம் ஆகிய பள்ளிகளின் தாளாளராக திருமதி. A.மரிய சாந்தி, M.A., D.Ed. அவர்களை 01–12–2022 முதல் நியமனம் செய்ய செயற்குழு தீர்மானிக்கிறது. இந்த நியமனம் பணி ஏற்பு நாளிலிருந்து ஓர் ஆண்டு காலம் மட்டுமே செயல்பட வேண்டும் என்று செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/5/22 ஆசிரியர்கள் நியமனம்

நமது சபைச்சங்க நிர்வாகத்திற்குட்பட்ட வள்ளியூர், வடக்கன்குளம் கன்கார்டியா மேல்நிலைப் பள்ளிகளின் கடந்தகால நிர்வாகங்களினால் செய்யப்பட்ட ஆசிரியர்களின் நியமனத்தில் முரண்பாடுகள் இருப்பதால் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளை சந்தித்து பேசவும், பேசிய பிறகு தீர்வு இல்லாத நிலையில் நீதிமன்றம் சென்று தீர்வு காண சபைச்சங்க செயலாளரை அதிகாரப்படுத்தி செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/6/22 சபைச்சங்க நிர்வாகச் செலவு

நமது சபைச்சங்க அலுவலக பராமரிப்பு நிர்வாகச் செலவு மற்றும் வட்ட நிர்வாகச் செலவுக்காகவும் இ.சு.லு.ச. அலுவலகத்திலிருந்து ரூ. 2,00,000/– பெறப்பட்டது. அந்த தொகையிலிருந்து வட்டத்திற்கு ரூ. 10,000/– வீதம் 5 வட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் அதனை பெறுவதற்கு வட்ட பொறுப்பாளர்களாகிய தலைவர் / செயலர் / பொருளர் பெயரில் வங்கியில் புதிய கணக்கு ஆரம்பிக்க வேண்டும். வட்டத்தலைவர் இல்லாத வட்டங்கள் சபைச்சங்கத் தலைவரையும், வட்ட செயலாளர் / பொருளாளர் இல்லாத வட்டங்கள் சபைச்சங்க பொருளாளரையும் இணைத்து வங்கி கணக்கை ஆரம்பித்து அதற்குரிய காசோலையை பெற்றுக் கொள்ள செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/7/22 பயிற்சிப் போதகர்கள் (CRM) கூட்டம்

நமது சபைச்சங்கத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கும் பயிற்சிப் போதகர்களின் கூட்டம் நடத்தவும், அவர்கள் தங்களுடைய கண்காணிப்பு போதகரோடு கூட்டத்தில் கலந்து கொள்ளவும் மற்றும் பணி நியமனம் பெற்ற தினத்திலிருந்து 2022, அக்டோபர் 31 –ம் தியதி வரை உள்ள பணி அறிக்கையை சபைச்சங்க தலைவரிடம் சமர்ப்பிக்கவும் செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/8/22 போதகர்கள் இடமாற்றம்

தோவாளை வட்டம், செண்பகராமன்புதூர் போதக வட்டத்தில் போதகராக ஊழியம் செய்யும் அருள்திரு. M. ஜெயா ஆலின் மற்றும் நாகர்கோவில் வட்டம், ஊட்டுவாழ்மடம் போதக வட்டத்தில் போதகராக ஊழியம் செய்யும் அருள்திரு. K. ஜெயசிங் ஆகிய இருவரும் மாற்றம் கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். மனுவை பரிசீலித்த செயற்குழு பொது மாறுதல் கலந்தாய்வு நேரத்தில் இவர்களது மனு பரிசீலனை செய்து முன்னுரிமை அடிப்படையில் இடமாற்றம் செய்ய செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/9/22 அருள்திரு. M. ஜெயதாஸ் மனு

இவர் **2014 –**ம் ஆண்டு நமது சபைச் சங்கத்தில் போதகராக பணியாற்றிக் கொண்டிருக்கும் போது கிறிஸ்டியன் மிஷன் சர்வீஸ் (CMS) நிறுவனத்திற்கு ஊதியமில்லா விடுப்பு கேட்டு பணிக்கு சென்றார். தற்போது அங்கு பணிக்காலம் முடிவடைந்த நிலையில் மீண்டும் சபைச் சங்கத்தில் போதகர் பணி கேட்டுள்ளார். மனுவை பரிசீலித்த செயற்குழு போதக வட்டங்களில் காலியான பணியிடம் ஏற்படும் போது அன்னாருக்கு நியமனம் செய்வதற்கு முன்னுரிமை வழங்க செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/10/22 பெண் ஊழியர் கூட்டம்

நமது சபைச்சங்கத்தில் பெண் ஊழியர்கள் ஊதியம் குறைவாக பெற்று வருகிறார்கள்.அந்த நிலைமையை இ.சு.லு.ச. பொறுப்பாளர்களோடு கலந்து பேசி நல்ல ஏற்பாடு செய்யவும் மற்றும் பெண் ஊழியர்கள் தங்களது பணி அறிக்கையை சபைச் சங்க தலைவருக்கு மாதந்தோறும் சமர்ப்பிக்கவும் செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/11/22 கிறிஸ்துமஸ் பரிசு

நமது சபைச்சங்கத்தில் பணிபுரியும் போதகர்கள், பயிற்சி போதகர்கள், அவர்கள் பணிபுரியும் போதகவட்டம் / நற்செய்திப் பணியிடங்களில் **1** மாத ஊழியத்தை கிறிஸ்துமஸ் பரிசாக வழங்கவும் மற்றும் இ.சு.லு.ச. மூலம் போதகர்கள், பயிற்சி போதகர்கள், பெண் ஊழியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவருக்கும் நமது சபைச் சங்கத்தின் மூலம் வழங்குவதற்கு இ.சு.லு.ச. பொதுப் பொருளாளர் / செயலாளரை கேட்டுக் கொள்ள செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/12/22 வட்ட பொறுப்பாளர்கள் கூட்டம்

நமது சபைச்சங்கத்திலுள்ள ஐந்து வட்டங்களில் உள்ள தலைவர், துணைத் தலைவர், செயலாளர், இணைச் செயலாளர் மற்றும் சபைச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் சேர்ந்து வட்டத்திலுள்ள ஊழியத்தை குறித்து கலந்து பேசுவதற்கு ஐந்து வட்டப் பொறுப்பாளர்கள் கூட்டுக் கூட்டம் நடத்த செயற்குழு தீர்மானிக்கிறது.

## EC/13/22 ஐந்து நிலைக் குழுக்கள் நியமனம்

இ.சு.லு.ச. அமைப்புச் சட்ட விதிகளின் படி (அமைப்புச் சட்டம் – சரத்து வட்டம் **3** சபைச்சங்க பிரிவு **3**) ஐந்து நிலைக்குழுக்கள், உறுப்பினர்கள், கூட்டுநர்கள் மற்றும் எல்லா வட்டத்தின் செயற்குழு உறப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் படியாக ஏற்கெனவே நிர்வாக குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலைக்குழுக்களுக்கு இந்த செயற்குழு கூட்டத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

I. திருப்பணி மற்றும் உக்கிராணத்துவ நிலைக்குழு:

1. Rev. S. டேவிட் ஜெயக்குமார் – குளச்சல் வட்டம் – கூட்டுநர்
2. Rev. D. ராஜா – திருநெல்வேலி வட்டம்
3. Rev. T. டேவிட் தம்பிராஜ் – நாகர்கோவில் வட்டம்
4. Mr. G. சிம்சன் – மதுரை வட்டம்
5. Mr. T. கிருபாகரன் – தோவாளை வட்டம்

II. கல்வி நிலைக்குழு:

1. Mr. S. சைமன் பிரான்சிஸ் – திருநெல்வேலி வட்டம் – கூட்டுநர்
2. Mr. Y. தமிழ்செல்வன் – தோவாளை வட்டம்
3. Mr. S. மெயின்சன் – மதுரை வட்டம்
4. Rev. T. டேவிட் தம்பிராஜ் – நாகர்கோவில் வட்டம்
5. Rev. S. டேவிட் ஜெயக்குமார் – குளச்சல் வட்டம்

6. Mr. A. ரவிச்சந்திரன் – தலைமையாசிரியர், கன்கார்டியா மேல்நிலைப்பள்ளி, வடக்கன்குளம்
7. Mr. P. சேகர் – தலைமையாசிரியர், கன்கார்டியா மேல்நிலைப்பள்ளி, பூட்டேற்றி
8. Mr. K. பால்சுந்தர் – தலைமையாசிரியர், கன்கார்டியா உயர்நிலைப்பள்ளி, நாகர்கோவில்
9. Mr. P. கர்ணதாஸ் – தலைமையாசிரியர், லுத்தரன் நடுநிலைப்பள்ளி, சரல்விளை
10. Mr. A. மார்ட்டின் பிரேம் சந்தர் – தலைமையாசிரியர், லுத்தரன் தொடக்கப்பள்ளி, நடூர்

III. சொத்து பரிபாலன நிலைக்குழு:

1. Rev. J. ஜாண்தாஸ் – தோவாளை வட்டம் – கூட்டுநர்
2. Dr. C. ஜீவராஜ் – குளச்சல் வட்டம்
3. Mr. C. ஜெயச்சந்திரன் – நாகர்கோவில் வட்டம்
4. Mr. C. மெயின்சன் – மதுரை வட்டம்
5. Mr. S. சைமன் பிரான்சிஸ் – திருநெல்வேலி வட்டம்

IV. சமூக பொருளாதார மேம்பாட்டு நிலைக்குழு:

1. Mr. G. சிம்சன் – மதுரை வட்டம் – கூட்டுநர்
2. Mr. சதீஷ் S. தாஸ் – குளச்சல் வட்டம்
3. Mr. C. ஜெயச்சந்திரன் – நாகர்கோவில் வட்டம்
4. Mr. T. கிருபாகரன் – தோவாளை வட்டம்
5. Rev. D. ராஜா – திருநெல்வேலி வட்டம்

V. நிதி சம்பந்தமான நிலைக்குழு:

1. Mr. R. வினோபா – சபைச்சங்க பொருளாளர்
2. Mr. G. ராஜன் – திருநெல்வேலி வட்டம் – கூட்டுநர்
3. Rev. N. வெஸ்லி மணிக்குமார் – மதுரை வட்டம்
4. Mr. A. பால்சன் – நாகர்கோவில் வட்டம்
5. Mr. Y. தமிழ்செல்வன் – தோவாளை வட்டம்
6. Mr. சதீஷ் S. தாஸ் – குளச்சல் வட்டம்

இந்த செயற்குழு கூட்டத்தில் திரு. Dr. J. ராஜசேகரன், தாளாளராக திருநெல்வேலி வட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு கல்வி நிலைக்குழுவால் அங்கீகாரம் அளித்துள்ளதை இந்த செயற்குழு உறுதி செய்கிறது.

## EC/14/22 நிபுணர் குழு நியமனம்

இ.சு.லு.ச. அமைப்புச் சட்ட விதிகளின் படி (பிரிவு 2–18, பிற்சேர்க்கை II) இணைப்பு II ஆகிய படிவங்களில் எல்லா திருச்சபைகளுக்கும் அனுப்பி நிபுணர் குழுவிற்கான உறுப்பினர்களின் விபரங்களை ஒவ்வொரு சபை / போதகவட்டத்தின் பரிந்துரையின்படி பெறப்பட்டு அதன்பிறகு ஒவ்வொரு துறைக்கும் தேவையான நிபுணர் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

## நன்றி நவிலல்

சபைச்சங்க பொருளாளர் திரு. R. பினோபா அவர்கள், தலைவர், உபதலைவர், செயலாளர், சபைச்சங்க செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களுக்கு நன்றி கூறினார்.

## முடிவு ஜெபமும் ஆசீர்வாதமும்

சபைச்சங்க உபதலைவர் ஜெபம் செய்து ஆசீர்வதாத்துடன் கூட்டம் முடிவுற்றது. அடுத்த செயற்குழு கூட்டம் 05–12–2022 –ம் தேதி நடைபெறும்.

அருள்திரு. K.S. டேவிட்சன்
தலைவர்

P. சாம் சுதாகர்
செயலர்